# ஸ்ரீ விநாயக சதுர்த்தி

## காஞ்சி காமகோடி பீடம், காஞ்சிபுரம்

நம் நாட்டில், மற்ற தேவதைகளை விட விநாயகரே விசேஷமாகக் கொண்டாடப்படுகிறார். விநாயகர் இல்லாத சிவாலயத்தைக் காண முடியாது, சிவவிஷ்ணு ஆலயங்களிலும் திருநாமத்துடன் விநாயகரைக் காணலாம். விநாயகரைப் பற்றிக் கூறாத புராணமில்லை.

விநாயக சதுர்த்தி பாத்ரபத சுக்லபக்ஷ சதுர்த்தி அன்று கொண்டாடப்படுகிறது. கஜமுகாசுரனை ஸ்ரீகணேசப் பெருமான் வதம் செய்த நாள் அது. துஷ்ட நிக்ரகம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்ததைக் கொண்டாடும் நாள் அது.

இந்த சதுர்த்திக்கு இன்னொரு விசேஷமும் உண்டு. ஒரு சமயம் ஸ்ரீகணேசப் பெருமான் ஆகாய மார்க்கமாகப் போகும் போது அவர் உருவத்தை பார்த்து சந்திரன் சிரித்தாராம். அதைக் கண்டு கோபம் கொண்டு ஸ்ரீகணேசர் அந்த சதுர்த்தியில் சந்திரனைப் பார்த்தவர்கள் எல்லோரும் துக்கம் அடைவார்கள் என்று சாபமிட்டார். அதற்குப் பரிகாரம் கேட்டு சந்திரன் மிகவும் வேண்டி கொண்டதற்குப் பிறகு ஸ்ரீ விநாயகர் மூன்றாம் பிறையைப் பார்ப்பவர்களுக்கு நான்காம் பிறையால் கெடுதல் ஏற்படாது என்று சொன்னார்.

ஒரு சமயம் சுதன்வா என்ற ஒரு அரசர் ஆண்டு வந்தார். அவரிடம் ஸ்யமந்தகம் என்ற ஒரு மணி இருந்தது. அது தினமும் 8 மணங்கு தங்கத்தைக் கொடுக்கும் தன்மையது. அது சுத்தமாயிருப்பவர்கள் அணிந்தால்தான் நன்மை செய்யும். அசுத்தமாயிருப்பவர்கள் அணிந்தால் அது அவர்களையே கொன்று விடும் தன்மையது. அந்த மணியை சுதன்வாவின் தம்பி ஸ்ரீபிரசேனன் அணிந்து வேட்டைக்குச் சென்றான். அந்த வேட்டையின் போது மிருங்களின் ரத்தம் பட்டு அவன் உடல் அசுத்தமாகியதால் அப்போது அந்த மணியை அணிந்திருந்த ஸ்ரீபிரசேனனை ஒரு சிங்கம் வந்து கொன்றது

அந்த சிங்கத்தை ஜாம்பவான் கொன்று மணியை எடுத்துக் கொண்டு போய் தன்னுடைய சிறிய குழந்தை படுத்திருக்கும் தொட்டிலின் மேல் ஒரு விளையாட்டுப் பொருளாகக் கட்டினார். இதயறியாத ஜனங்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தான் அந்த மணிக்கு ஆசைப்பட்டு பிரசேனனைக் கொன்று விட்டதாகக் கூறத்தலைப்பட்டார்கள். அந்த அபவாதத்தைப் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஜாம்பவான் குகைக்குள் போய் அந்த மணியையும் அந்த மணியை ஜாம்பவான் சம்பாதித்த விதத்தையும் பற்றி ஜாம்பவானின் பெண் ஜாம்பவதிப் பாடக் கேட்டார்.

ஸிம்ஹோ ப்ரஸேனம் அவதீத்:
ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத:

ஸுகுமாரக மா ரோதீ:
தவஹ்யேஷ்: ஸ்யமந்தக:

பிறகு ஜாம்பவானுடன் ஸ்யமந்தக மணிக்காக கிருஷ்ணன் சண்டையிட ஆரம்பித்தார். 15 நாட்கள் விடாமல் சண்டை நடந்தது. வெளியில் இருந்த ஜனங்கள் ஸ்ரீகிருஷ்ணபகவான் இறந்து விட்டாரென்று எண்ணி உத்தரக்ரியைகள் செய்ய ஆரம்பித்தார்கள். 15 நாட்கள் ஒருவருக்கும் வெற்றி தோல்வி இல்லாமலேயே சண்டை நடந்தது. பிறகு ஸ்ரீ ஜாம்பவான் தான் சண்டையிட்டது ஸ்ரீராமபிரானே என்று தெரிந்து கொண்டு அவருக்குத் தன் புத்திரி ஜாம்பவதியை கல்யாணம் பண்ணிக் கொடுத்து ஸ்யமந்தக மணியையும் கொடுத்து அனுப்பி வைத்தார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் தனக்கு ஏன் இந்த கெட்ட பெயர் வந்தது என்று கேட்க, அதற்கு பகவான் நாலாம் பிறையைப் பார்த்ததனால் தான் ஏற்பட்டது என்று மகரிஷிகள் சொன்னார்கள்.பகவானுக்கே நாலாம்ப்பிறையைப்பார்த்ததனால் இந்தக்கதி ஏற்பட்டதென்றால் மனிதர்களுக்கு ஏற்படும் கதியைப் பற்றிக்

கேட்க வேண்டுமா? அதைப்போக்குவதற்காக ஸ்ரீ விநாயகரை விநாயக சதுர்த்தி அன்று பூஜை செய்வோமாக.

விநாயக சதுர்த்தி விரதத்தை ஆரம்பித்து, ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி பூஜை செய்து சதுர்த்தி வ்ரத உத்யாபனம் செய்வது நம் நாட்டு வழக்கம். பலவிதமான ஸித்திகளைத் தருவதால், பலரும் இதைக் கொண்டாடுவர். எந்த சுபமான காரியத்தை ஆரம்பித்தாலும் முதலில் விநாயக பூஜை செய்கிறோம். இவ்விநாயகரைச் சாணியினாலும், சந்தனத்தாலும், மஞ்சளாலும், வெல்லத்தாலும், களி மண்ணினாலும், வெள்ளெருக்கின் வேரினாலும் மற்ற லோஹங்களாலும் செய்கிறோம்.

சாஸ்திரங்கள் விநாயகரை ப்ரணவ நாதரூபியாய்க் கூறுகிறது. ஓங்கார ரூபி, கஜமுகன், விநாயகர், பிரணவ ஸ்வரூபி, துதிக்கையோடு இருக்கிற அவர் சிரசு, கையிலே இருக்கும்படியான மோதகம் இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் பிரணவம் மாதிரியாக இருக்கும்.

எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டவர் பரமாத்மா. அவர் மண்ணாய், விண்ணாய் எல்லாமாக இருப்பவர். இந்த உண்மையை ஊனக் கண்ணுக்குக் காண்பிக்கவே விநாயகர் யானை முகத்தானாகவும் பெரிய உதரமுள்ளவராகவும் உருக்கொண்டு இருக்கிறார். விநாயகர் என்றால் தனக்கு மேல் நாயகர் இல்லாதவரென்று பொருள். அவர் அனாதியாய், முழுமுதற் கடவுளாய் உள்ளவர். வேதம் இவரை “ஜ்யேஷ்ட ராஜன்” என்றும் “ப்ரும்மணஸ்பதி” என்றும் அழைக்கின்றது. ஜ்யேஷ்ட என்ற சொல் முதலில் உதித்தவர் என்றும் ப்ரும்மணஸ்பதி என்ற சொல் வேதத்திற்குத் தலைவன் என்றும் பொருள். ஸ்ரீவைஷ்ணவர்களும் “விஷ்வக்ஸேநர்” என்ற பெயருடன் இவரை பூஜிக்கின்றனர். இவர் பெருமாள் கோயிலில் “தும்பிக்கையாழ்வார்” என்ற நாமத்துடன் இருப்பார்.

விநாயகருடைய தத்துவத்தைக் கொஞ்சம் ஆலோசனை பண்ணிப் பார்க்கலாம். இந்த மூர்த்தியின் ஒவ்வொரு அம்சத்தைக் கவனித்தாலும் அதில் நிறையத் தத்துவங்கள் இருக்கின்றன.

பிள்ளையாருக்குக் தேங்காய் உடைப்பது எதற்கு? அவர் ஸாக்ஷாத் பரமேசுவரனுடைய குமாரர். விக்னேசுவரர் தம் அப்பாவைப் பார்த்தே “உன் சிரசையே எனக்குப் பலி கொடு” என்று கேட்டு விட்டாராம். ஈசுவரனுடைய சிரசைப் பலி கொடுத்தால் தான் எந்த காரியமும் விக்கினம் இல்லாமல் ஜயம் ஆகும். ஈசுவரன் மூன்று கண்களை உடையவர். அதற்காகத்தான் மூன்று கண்ணுடைய அவர் தலைக்குப் பதில் மூன்று கண்களையுடைய தேங்காயை உடைக்கிறோம்.

தேங்காய் உடைப்பது உயர்ந்த ஒரு தத்துவத்திற்கு அறிகுறி. ஈசுவரன் தலையை வாங்கும்படியான சக்தி விநாயகருக்கு இருக்கிறது. எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால் தான் மகாகணபதிக்குப் பீரிதி ஏற்படுகிறது. அவ்வளவு பெரிய தியாகம் செய்வதற்கு தயார் என்ற அறிகுறியாகத்தான் ஈசுவர சிருஷ்டியிலே, த்ரிநேத்திரத்தை உடைய காயைச் சிருஷ்டுத்து அந்த காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈசுவரன் அநுக்கிரகித்திருக்கிறார். அந்த காயை அப்படியே சிதர்த்தேங்காயாக உடைக்க வேண்டும் சிதர்த்தேங்காய் குறைந்தது மூன்று துண்டுகளாகவாது உடைய வேண்டும்.

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை, பெரிய வயிறு, பெரிய உடம்பு, அவருக்கே ஸ்தூலகாயர் என்று பெயர். ஒரு மலை போல இருக்கிறார். ஆனால் அவர் குழந்தை! குழந்தைக்கு எது அழகு! குழந்தை என்றால் அந்த பருவத்தில் நிறையச் சாப்பிட வேண்டும். கொஞ்சங்கூட இளைக்கக்கூடாது குழந்தை என்றால் தொந்தியும் தொப்பையுமான கொழு கொழுவென்று இருந்தால் தான் அழகு. நிறைய சாப்பிடுவதுதான் அழகு. குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்க வேண்டும் என்பதை இந்தக் குழந்தைச் சுவாமியே காட்டிக் கொண்டிருக்கிறார்.

இந்த ஸ்துலகாயர் நமக்கு வேறு ஒர் ஈசுவர தத்துவத்தையும் விளக்கிக் கொண்டிருக்கிறார். இவருக்கு வாகனம் மூஞ்சூறு. இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர் விரோதமான ஆகிருதி உடையது மூஞ்சூறு. இதை அவர்தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். இவர் எத்தனைக் கெத்தனை பெரிய சுவாமியாக இருக்கிறாரோ அத்தனைக்கு அத்தனை சிறிய வாகனமாக வைத்துக் கொண்டாலும், வாகனத்தினால் சுவாமிக்கு கௌரவம் இல்லை. சுவாமியால் தான் வாகனத்திற்குக் கௌரவம். வாகனத்திற்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி நெட்டி பிள்ளையார் மாதிரி கனம் இல்லாமல் இருக்கிறார். அதற்குச் சிரமம் உண்டாகாமல் ஆனால் அதற்கு மரியாதை, கௌரவம் எல்லாம் உண்டாகும்படியாகத் தம் உடம்பை வைத்துக் கொண்டிருக்கிறார். அந்த பிள்ளையார் மற்றவர்களை உபகரணமாக வைத்துக் கொண்டு, அவர்களுக்கு ஒர் அந்தஸ்தைக் கொடுத்தாலும், தாம் அவற்றுக்கு ஒரு பாரமாக இல்லாமல் இருக்கிறார் என்ற பெரிய தத்துவத்தை அவருடைய வாகனம் நமக்குக் காட்டுகிறது. பக்தர்களுக்கு ஏற்றபடி பகவான் இருந்து அநுக்கிரகம் செய்கிறார் என்பது இதிலிருந்து விளங்குகிறது.

விநாயகர் ஏகதந்தம் உடையவர். ஒற்றைக் கொம்பர். அவருக்கிருந்த இரண்டு கொம்பிலே ஒரு கொம்பை பாரதம் எழுதுவதற்காக ஒடித்துக் கொண்டு விட்டார். ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொன்றிலே அதிக கௌரவம் இருக்கும். சகல மானுக்குக் கௌரவம் அதன் வாலில்தான் இருக்கிறது. மயிலுக்கு அதன் தோகையே விசேஷம். அதற்கு அலங்காரம், பெருமை, கர்வம், எல்லாம் அதன் தோகைதான், அதை ஜாக்கிரதையாக அது ரட்சிக்கும். யானை தன் தந்தத்தை தீட்டி வெள்ளை வெளேரேன்று வைத்திருக்கும்.

இந்த யானை என்ன செய்தது? அதன் கொம்பில் ஒன்றையே ஒடித்துக்கொண்டு மகாபாரதத்தை எழுதிற்று. தன் 66

அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கின்ற ஒன்றைக்காட்டிலும் தர்மத்தைத் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை இங்கே இந்த யானை காட்டியது. நியாயத்திற்காக, வித்தைக்காக எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்பதைத்தானே தியாகம் பண்ணிக்காடியிருக்கிறார் விநாயகர். சுவாமிக்கு ஆயுதம் என்று தனியாக ஒன்றும் வேண்டியதில்லை. எதையும் ஆயுதமாக அவர் நினைத்தால் உபயோகித்துக் கொள்வார் என்பதற்கும் இது உதாரணம். தம்முடைய சரீரத்தில் எது உத்கிருஷ்டமான பாகமோ அதை எடுத்துக்கொண்டே லோகத்தில் வித்தை பரவுவதற்கும், சத்தியம், ஞானம், தர்மம் எல்லாம் பரவுவதற்கும் விநாயகர் மகாபாரத்தை எழுதினார் என்ற தத்துவம் நமக்குத் தெரிகிறது.

சந்திரன், சமுத்திரம், யானை இவற்றையெல்லாம் எத்தனை தடவை பார்த்தாலும் இன்னும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்றே தோன்றும். பார்க்க பார்க்க அலுக்காது. ஆனந்தம் பொங்கும். அதனால் தான் குழந்தை சுவாமி தன்னைப் பார்க்கிற ஜனங்களுக்கு எல்லாம், பார்க்கப் பார்க்க ஆனந்தம்

எப்போதும் பொங்கிக் கொண்டிருக்கும் படியாக யானை உருவத்தோடு இருக்கிறார்.அது ஆனந்த தத்துவம், ஆராத ஆசையின் தத்துவம். அவர் பார்வதி பரமேசுவரர்களுக்குப் பிள்ளை, இந்த உலகத்திற்கே பிள்ளையாக ஆவிர் பவித்ததனால் அவரை நாம் விநாயகர் என்பதைவிடப் பிள்ளையார் என்றே அதிகமாக அழைக்கிறோம்.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக்கரணம் போடுகிறோமே, அதை நமக்கு எல்லாம் காட்டியவர் மஹா விஷ்ணுதான் என்றொரு கதை இருக்கிறது. ஒரு சமயம் மஹா விஷ்ணுவுடைய சக்கரத்தைப் பிடுங்கிக் கொண்டு அவர் மருமான் பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து பிடுங்குவது என்றால் அது எளிதில் முடியாதது. அவர் மிகவும் பலமுடையவர். அவரை அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால் அவரைச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தில் அது கீழே விழுந்தால் எடுத்துக்கொண்டு ஓடி விடலாமென்று மஹாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. உடனே எடுத்துக்கொண்டு விஷ்ணு ஓடி விட்டார்.

தோர்பி:கரணம் என்பதே தோப்பிக்கரணம் என்று மாறியது. தோர்பி : நான்கு கைகளினால் என்று அர்த்தம். கரணம் என்றால் காது என்று அர்த்தம். தோர்பி: கரணம் என்றால் நான்கு கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

தோப்பிக்கரணம் போடுவது போல் தலையில் குட்டிக்கொள்வதும் விநாயகர் ஸந்நிதிக்கே தனியாக ஏற்பட்ட, சிறப்பான முறை. இதற்குப் புராணம் இருவகையான கதைகளைக் கூறுகின்றது.

சிவனிடமிருந்து உயர்ந்த சிவலிங்கத்தைப் பெற்ற இராவணன் அதை இலங்கையில் பிரதிஷ்டை செய்யக் கருதினான். அப்படிச் செய்து விட்டால் அவனை வெல்ல ஒருவராலும் முடியாது. இதை அறிந்த தேவர்களெல்லாம் கலந்து யோசித்து - விநாயகரை வேண்டினர். அவர் ப்ரும்மசாரி வடிவந்தாங்கி இராவணனருகே சென்றார். இவரது செயலால் இராவணனுக்கு ஜலவிஸர்ஜனம் செய்ய அவசரம் நேர்ந்தது. சிவலிங்கம் முதலிய சிறந்த வஸ்துக்களைப் பூமியில் வைக்கலாகாது. சிவ பெருமான் இராவணனிடம் லிங்கத்தை கீழே வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அதை மறுபடியும் எடுக்க முடியாது என்று எச்சரிக்கை செய்திருந்தார். ஆதலால் அச்சமயம் அங்கே வந்த ப்ரும்மசாரியிடம் அதையளித்து, தான் சுத்தி செய்து கொண்டு வருமளவும் கையில் வைத்திருக்கும்படிக் கூறினான். அவரும் அதற்கு இசைந்து, மும்முறை கூப்பிடுவேன் அதற்குள் நீ வராவிட்டால் பூமியில் வைத்துவிடுவேன் என்றார். இராவணன் ஜலவிஸர்ஜன்ம் செய்யும் போது விநாயகரது மாயையால் மேன்மேலும் மூத்ரம் வந்த வண்ணமே இருந்தது. விநாயகரும் தான் சொன்னபடி மும்முறை அழைத்தும் அவன் வராததால் லிங்கத்தைப் பூமியில் வைத்துச்சென்றார். இராவணன் சுத்தி செய்து கொண்டு வந்து சிவலிங்கத்தை தூக்கினான். அது வராமல், பூமியில் ஊன்றிவிட்டது. தசமுகன் சினங்கொண்டு ஓடிப்பிடித்து ப்ரும்மசாரி தலையில் குட்டினான். விநாயகர் தன் நிஜ ஸ்வரூபதை எடுத்தார். இராவணன் பயந்து சுவாமி நான் செய்த தவற்றை மன்னிக்கவும் அதற்காக என் இரு கரங்களாலும் என்னையே குட்டிக்கொள்கிறேன் என்றான்.

இன்னொரு கதை இப்படிக் கூறுகிறது. கஜமுகாஸுரனை விநாயகர் அடித்துக் கீழே தள்ளியபின் அவன் பெருச்சாளி உருவெடுத்துப் போர் புரிந்தான். அதிலும் தோல்வியுற்று அவருக்கு வாஹனமாகி அவரைப் போற்றிப் புகழ்ந்தான். விநாயகர் அவனை என்ன வரம் வேண்டும் மென்று கேட்டார். கஜமுகாஸுரன் நான் அரசனாக இருந்தபோது தேவர்களுக்குத் தந்த சிக்ஷையான தலையில் குட்டிக்கொள்ளுதல், இரு காதுகளையும் பிடித்துக்கொண்டு தோப்பிக்கரணம் போடுவது என்பவைகளை நம் ஸந்நிதியில் உமது பக்தர்கள் செய்ய வேண்டும் எனக்கேட்டான். அன்று முதல் இந்தப் பழக்கம் ஏற்பட்டது.

## விநாயகர் - பிரும்மசாரியா? கிருகஸ்தரா

கணபதி பிரும்மசாரி என்று சொல்வது வழக்கம். அவருக்கு சித்தி, புத்தி, வல்லபை என்ற மூன்று மனைவிகள் என்றும் சொல்லப்படுகிறது. எது சரி? இரண்டும் சரி.

ஞானம் என்பது பிரும்ம ஸ்வரூபம். அதுவே கணபதி. புத்தி இச்சா சக்தி, சித்தி கிரியா சக்தி. இச்சா சக்தியும் கிரியா சக்தியும் கூட இருந்தால் தான் ஞானம் ஒரு காரியத்தை செய்ய முடியும். வல்லபை என்பவளே ஞான சக்தி. ஞான மூர்த்தியுடன் ஞான சக்தி கலந்தவள். அதனால் தான் இன்னாருடன் சமேத என்று சொல்லும் போது வல்லபை சமேதே என்று சொல்லும் போது வல்லபை சமேதே என்று வல்லபையின் பெயர் கூறப்படுகிறது.

சிருஷ்டி, பரிபாலனம் இதை இரண்டையும் செய்யும் போது விநாயகர் கிரகஸ்தரே. பிரபஞ்சம் ஒடுங்கும் போது இச்சை கிரியை சக்திகளை தனக்குள்ளே லயப்படுத்தி கேவல ஞானமாக இருக்கிறார். ஆகவே அப்போது பிரும்மசரியம். உலகில் சில அசுரர்கள் அஞுஞானத்தின்

உருவாகத் ழிதான்றி சாதுக்களை இம்சிக்கின்றனர். அந்த அஞுஞானத்தை அகற்ற அதாவது அசுரனை சம்ஹாரம் செய்யும் போது ஞானமே முன் நிற்க வேண்டும் பெண் வடிவமான இச்சா கிரியா சக்திகள் கூட இருந்தால் கருணை அதிகமாகி அசுர சிக்ஷை நடைபெறாது. அதனால் அவருடைய பல அவதாரங்களில் சில பிரும்மசாரியாக அமைந்திருக்கின்றன.

கணபதிக்கு இம்மூன்று பேர் தான் பத்தினிகள் என்று நினைக்க வேண்டாம். புத்தி தேவி, முக்தி தேதி என்று இரு உபபத்தினிகளும் உண்டு. புத்தியுடன் பக்தி சேர்ந்து சித்தி பெற்றால் முக்தி சித்தி புத்தி இரண்டு பேரும் விநாயகரின் பத்னிகள். மனிதனாகப் பிறந்த எவனுக்குமே சிவமயமாவதற்கு வேண்டியவை புத்தியும் சித்தியும் தான். அதாவது அவனவன் தன் வாழ்நாளில் சேகரிக்கக் கூடிய மூளை விருத்தியும் குணத்தினால் ஏற்படக்கூடிய சித்தியுமே அவனை உய்விக்கும். ஆகவே மனிதனால் போற்றப்பட வேண்டிய இரு அம்சங்களையே பிள்ளையாரின் மனைவிகளாக குறிப்பிடுகிறார்கள்.

புத்தி - மனித வர்க்கம் தன் வாழ் நாட்களில் தனக்கு ஏற்படக் கூடிய சுகதுக்கங்களை அனுபவித்து அவைகளில் காணப்படும் ஈசுவர சக்தியை அறிந்து அச்சக்தியை பன்மடங்காக்கி தன் அறிவை உயர்த்துவது.

சித்தி - வாழ்நாளில் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை தன்னுடையது என்று ஆசை கொள்ளாமல் எல்லாம் இறைவனுடையதே என்று அறிந்து அவைகளைத் துறப்பதேயாகும். மனிதன் சேகரித்தவைகளில் மேலானது புத்தி ஒன்றே. அந்த புத்தியை தெய்வ சக்தியாக மாற்றுவதே சித்தி.

ஒருவன் சித்தி பெற வேண்டுமானால் புத்தியை பெருக்கிக் கொண்டு பின் அதையே துறக்க வேண்டும். புத்தியைப் பெற சத்கர்மங்கள் செய்ய வேண்டும்.